சுற்றறிக்கை இல 06/2017

எனது இல:- சிபாதி 3/5/2 -I 2017.04

மேலதிக பணிப்பாளர் நாயகம்,

சகல பணிப்பாளர்கள் / பிரதிப் பணிப்பாளர்கள் / உதவிப் பணிப்பாளர்கள்,

தலைமையக பதவிநிலை உத்தியோகத்தர்,

சகல படைப்பிரிவுகளினதும் கட்டளையிடும் அதிகாரிகள் / பயிற்சிப் பாடசாலைகளின் கட்டளையிடும் அதிகாரிகள் மற்றும் கருத்திட்டங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்.

**<u>சிவில் பாதுகாப்பு அங்கத்தவர்களின் உத்தியோகபூர்வ பதவி முத்திரை பயன்படுத்துவதை கட்டுப்படுத்தல்</u>**

இந்த திணைக்களத்தில் கடமையிலுள்ள சிவில் பாதுகாப்பு அங்கத்தவர்கள் திணைக்களத்துக்கென முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்படாத மற்றும் முறையாக நியமிக்கப்படாத பதவிப் பெயர்களைப் பயன்படுத்தி உத்தியோகபூர்வ கடமைகளின் போதும் மற்றும் வேறு வெளி தரப்பினர்களுடன் தொடர்புகொள்ளும் போதும் பதவி முத்திரையைப் பயன்படுத்துவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனுமதிக்கப்படாத பதவிப் பெயர்களை (உதா:- நிலைய பொறுப்பதிகாரி, பண்ணை பொறுப்பதிகாரி, கருத்திட்டப் பொறுப்பதிகாரி) பதவி முத்திரைகளில் பயன்படுத்த முடியாது. அத்தோடு சிரேஷ்ட முகாரி எனும் பதவிப் பெயரில் திணைக்களத்திற்கு பதவியொன்று அனுமதிக்கப்படாத காரணத்தினால் சிரேஷ்ட முகாரி எனும் பதவிப் பெயரில் பதவி முத்திரையொன்றை பயன்படுத்த முடியாது. அதற்கிணங்க மேற்படி பதவி முத்திரைகள் பயன்படுத்தப்படுவது முற்றாக நிறுத்தப்படுதல் வேண்டும்.

02. ஆயினும் திணைக்களத்தின் சங்கங்களுக்காக (உதா:- சமய சங்கங்கள், நலத்திட்ட நிதியம் போன்ற) பயன்படுத்தப்படும் பதவிப் பெயர்களான தவிசாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழு அங்கத்தவர் போன்ற பதவிகளுக்கு மாத்திரம் ஏற்புடைய சங்கத்தின் யாப்பின் பிரகாரம் மற்றும் காலத்திற்கேற்ற வகையில் பொதுக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்க பதவி முத்திரைகளைப் பயன்படுத்த முடியும்.

03. மாவட்ட உத்தியோகத்தர்களினால் தங்களது அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்களைப் பயன்படுத்தி உபயோகிக்கும் பதவி முத்திரைகளுக்கு மேற்படி நியமங்கள் ஏற்புடையதாகாது. எதிர்காலத்தில் திணைக்களத்தின் ஏதேனும் அனுமதிக்கப்பட்ட பதவியொன்றுக்கு எவரேனுமொருவர் பதவி முத்திரையைப் பயன்படுத்துமிடத்து அதற்காக பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டுமென்பதையும் அறியத்தருகின்றேன்.

04. இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2017.04.01 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும்.

**சந்திரரத்ன பல்லேகம**
**பணிப்பாளர் நாயகம்**

பிரதி-: 1. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு - தகவலுக்காக